**Newspaper** : Makkal Osai

**Date** : 17 May 2022

**Page** : 10

**Title** : Lack of contribution from youths is the reason for the dysfunction of 934 Rukun Tetangga divisions

**Summary** :

Deputy National Unity Minister Wan Ahmad Fayhsal Wan Ahmad Kamal said that poor participation of young people has been identified as the reason why a total of 974 Neighborhood Watch Areas (KRT) nationwide had become inactive.

As such, he added that neighborhood watches have become synonymous with pensioners while young people were seen to be "avoiding" the system.

"I believe we need to look into why neighborhood watches are dying and it could be because the youngsters are shying away from the programme.

"And now, National Unity Minister Datuk Halimah Mohamed Sadique has decided that neighborhood watches that are no longer active and have not submitted their reports will no longer receive the annual grant of RM6,000," he said to the reporters during the press conference after the Hari Raya open house held in Kampung Tersusun, Simpang Empat.

He was questioned on the reason for around 10% of dysfunctional KRTs even though government allocated enough of funds. On March 25, National Unity Minister Datuk Halimah had mentioned that a total of 934 KRTs in nationwide are inactive and found those KRTs are in danger zone from the RM56lakhs of allocation.

According to Wan Ahmad Fayhsal, the Ministry of National Unity is working with the Ministry of Youth and Sports to create a youth leadership wing in the KRTs. We will reactivate the young neighbors program so that youth associations can move in line with the local KRTs.

# இளைஞர்களின் பங்களிப்பு இல்லாமையே 934 ருக்குன் தெத்தாங்கா வட்டாரங்களின் செயலிழப்பிற்குக் காரணம்



வான் அகமட் ஃபைசால்




கவின்மலர்

பாகான் செராய், மே17- இளைஞர்களின் பங்களிப்பு இல்லாததால் 934 அண்டை அயலார் நல்லுறவு இயக்கமான ருக்குன் தெத்தாங்கா (கேஆர்டி) வட்டாரங்கள் செயலிழந்ததற்கான காரணம் என்பதை தேசிய ஒற்றுமை அமைச்சகம் கண்டறிந்துள்ளது என்று அதன் துணை அமைச்சர் வான் அகமட் ஃபைசால் வான் அகமட் கமால் கூறினார். ஓய்வூதியம் பெறு பவர்களின் சரணாலயமாக அதாவது ஏற்றதாக இவ்வமைப்பு இருப்பதாலும் இளைஞர்களை ஈர்ப்பதாகவும் ஈடுபடுத்து வதாகவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களைத் தொடர்ந்து கவர்வதற்கு ஏற்ற வகையில் ருக்குன் தெத்தாங்காவின் கீழ் செயல்பட்டு வந்த ரக்கான் மூடா திட்டம் மீண்டும் உயிரூட்டப்படும் என்று அவர் கூறினார்.

சில வட்டாரங்களில் ருக்குன் தெத்தாங்கா செயலில் இல்லாததற்கான காரணத்தை நாங்கள் மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன், தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சர் டத்தோ ஹலிமா முகமது சாடிக் சொன்னதைப் போல செயலற்ற மேலும் தங்களின் செயலறிக்கையை சமர்ப்பிக்காத எந்தவொரு ருக்குன் தெத்தாங்கா வட்டார அமைப்பிற்கும் ஆண்டுக்கு 6,000 ரிங்கிட் ஒதுக்கீட்டு நிதி வழங்கப்படுவதில்லை என்று தீர்மானித்துள்ளது என்று இங்கு சிம்பாங் அம்பாட் செமாங்கோல் ஜாலான் குலாவில் அமைந்துள்ள கம்போங் தெர்சூசுனில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் திறந்த இல்ல விருந்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

போதுமான நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் நாடு முழுவதும் ஏறத்தாழ பத்து விழுக்காட்டு ருக்குன் தெத்தாங்கா அமைப்புகள் செயலிழந்து இருப்பது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

மார்ச் 25 அன்று ஒற்றுமைத்துறை அமைச்சர் ஹலிமா, நாடு முழுவதும் மொத்தம் 934 ருக்குன் தெத்தாங்காக்கள் குறைந்த செயல்திறனுடையவை என்றும் 56 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீட்டி லிருந்து பயனடையாத அபாயத்தில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக அறிவிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடான ஐந்து கோடி ரிங்கிட்டைப் பெறுவதற்கு, நாடு முழுவதும் அமைச்சகத்தின் கீழ் செயல் படும் ஒருமைப்பாட்டின் இயந்திரமாக இருக்கும் 8,674 ருக்குன் தெத்தாங்காக்களில் இருந்து இந்த எண்ணிக்கை இருப்பதாக ஹலிமா கூறினார். இதற்கிடையே இளைஞர்கள் ருக்குன் தெத்தாங்காவில் அதிக ஈடுபாடு காட்ட இளைஞர் கள், விளையாட்டு அமைச்ச கத்துடன் தமது அமைச்சு ஒத்துழைக்கும் என்று வான் அகமட் ஃபைசால் சொன்னார்.இளைஞர்களின் ஈடுபாட்டுடன் இந்த துறையில் புதியதாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க ருக்குன் தெத்தாங்காவை மறுகட்டமைத்து புத்துயிர் ஊட்ட விரும்புகிறோம்.

இவ்வமைப்பின் கீழ் ரக்கான் மூடா திட்டத்தைக் கொண்டிருப்பதுடன் இப் போது இளைஞர்களின் தலை மைப் பிரிவை உருவாக்குகி றோம். இதனால் இளைஞர் கள், இளைஞர் சங்கங்கள் ருக்குன் தெத்தாங்காவுடன் இணைந்து செயல்படுகின் றன என்று அவர் தெரிவித் தார்.நகரங்களில், ருக்குன் தெத்தாங்கா, இளைஞர் சங்கங்கள் ஒன்றிணைந்து சமூகப் பொறுப்பு, நகர்ப்புற விவசாயத் திட்டங்களை நடத்துவதன் மூலம் இளை ஞர்கள் சுறுசுறுப்பாகவும் ஈடுபாட்டுடனும் செயல்பட முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.